DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No MC.No. 4/2022 RW– 1

Name : ஆண்டி

Father's/Husband's Name : செல்வராஜ்

Village : குடகிப்பட்டி

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 46/2025

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of September 2025

(மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆஜர். மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை)**

2. மனுதாரர் எனது மனைவி என்றால் சரிதான். மனுதாரர் எனக்கு இரண்டாவது மனைவி என்றால் சரிதான். மனுதாரரை திருமணம் செய்வதற்கு முன்னர் எனக்கு ஏற்கனவே திருமணம் ஆகி நான்கு குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். நான் மனுதாரரை திருமணம் செய்யும்பொழுது எனது முதல் மனைவி இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் மனுதாரரை திருமணம் செய்ததன் வாயிலாக யோகலெட்சுமி, சசிகுமார் என்று இரு குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் மனுதாரர் அவர்கள் எனது குழந்தை இல்லை என்று சொல்கிறார், என்னை குழந்தைகளை பார்க்க விடுவதில்லை.

3. நானும், மனுதாரரும் குழந்தைகளும் எனது வீட்டில் வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். எனக்கு ஊரில் வேறு ஒருவருடன் தொடர்பு ஏற்பட்டு அதில் பிரச்சனையாகி பெரியவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடந்து பைசல்

செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மூன்றரை வருடங்களுக்கு முன்பு நானும், எனது மூத்த மகனும் சேர்ந்து மனுதாரரை அடித்து வீட்டை விட்டு விரட்டி விட்டோம் என்றால் சரியல்ல. என் மீது நத்தம் காவல் நிலையத்தில் குற்ற எண் 189/2022 என்ற வழக்கு உள்ளது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை தவிர வேறு எந்த வழக்கிற்காவது இந்த நீதிமன்றத்தில் ஆஜராகி ஜாமீன் பெற்றுள்ளேனா என்றால் இல்லை.

4. கடந்த 27.05.2022 ஆம் தேதி மதியம் சுமார் மூன்று மணியளவில் நான் மனுதாரரை அடித்து காயப்படுத்தியதாக என் மீது வழக்கு உள்ளது என்றாலும் அதை மறைத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனைவியையும், குழந்தைகளையும் பராமரிக்க வேண்டியது கணவனின் கடமை என்றால் சரிதான். நான் எனது மனைவி மற்றும் குழந்தைகளை பராமரிக்க கடமைப்பட்டவர் என்றாலும் மனுதாரர் கோரி உள்ள ஜீவனாம்ச பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றாலும் சரியல்ல. நான் மனுதாரருடனும் குழந்தைகளுடனும் சேர்ந்து வாழ தயாராக இருந்தாலும் மனுதாரர் அதற்கு ஒத்துழைப்பு தர மறுக்கிறார் என்று சாட்சி தெரிவிக்கிறார். மனுதாரரும் குழந்தைகளும் என்னுடன் வர தயாராக உள்ளார்கள் என்றாலும் நான் தான் அவர்களை அழைத்துச் செல்ல மறுத்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.09.09 17:38:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்